RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21s133

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# கண்மணி குணசேகரனின் வந்தாரங்குடி புதினம் காட்டும் சடங்குகள்

ம. சபரிநாதன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, உடுமலைப்பேட்டை-642126, தமிழ்நாடு, இந்தியா

# Kanmani Gunasekaranin Vandhaarankudi Puthinam Kattum Sadangugal

M. Sabarinathan [a, *]

[a] Department of Tamil, Government Arts College, Elayamuthur, Udumalaipettai-642126, Tamil Nadu, India

* Corresponding Author:
sabarinathanphd5593@gmail.com

Received: 04-11-2020
Revised: 11-06-2021
Accepted: 14-06-2021
Published: 19-06-2021

## ABSTRACT

Man has lived by various rituals since before he tried to live a civilized life. As civilization grows, all living beings are living their lives trapped within the triad of 'pati, pasu, pasam'. Just as cultivation brought the lands under its control for good growth, and all weeds were all removed and well cultivated, so too for an organism to grow well, our ancestors sowed the good and destroyed the evil and led a life of living with culture. There, rituals are included and guide the lives of the people. Rituals are generally divided into two types of rituals, pleasure rituals and suffering rituals. The nature of the rituals is revealed by classifying the rituals celebrated in the festivals as rituals performed in the Mangala event and the rituals performed in the Mangala event as the rituals performed in the Mangala event. And music and drama are well developed in rituals. Due to the economic crisis at the Mangala event, musical instruments such as the trumpet were reduced, but musical instruments called 'drums' were forced into the funeral ceremonies of the Mangala event. Rituals are the color of life in every human being who lives within the confines of 'arrogance, vanity, delusion'. Women play an important role in rituals. Various rituals take place, from putting the newborn baby in the cradle to experiencing various pleasures due to karma during their lifetime and burying them in the ground. The cradle-to-cradle and naming ceremony rituals are the same for the newborn male and female. For women, the yellow bathing ceremony and bracelet events are considered to be unique to women. Wedding ceremonies and death ceremonies come and go in everyone's life and go after its reaction. According to Kanmani Gunasekara's novel 'Vandarangudi', the study reveals that people are practicing rituals and worshiping God with devotion without harming the culture.

**Keywords:** Wedding rituals, Death rituals, Music Art, Drama Art.

## முன்னுரை

"வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு" என்ற நூலைப் படைத்த முனைவர் பாக்கியமேரி கூற்றின்படி, "மேனாட்டார் தொடர்பால் தமிழுக்குக் கிடைத்த புதிய இலக்கியம் புதினம் ஆகும். புதினம் என்னும் சொல் Novel என்னும் சொல்லில் இருந்து வந்தது. Novel என்றால் Newness என்று பொருள். இப்பொருளின் அடிப்படையிலேயே Novel என்பது புதினம் என தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நாவல் கலையியல் என்ற நூலைப் படைத்த இரா.பாலசுப்பிரமணியனின் கருத்துப்படி, "கவிதையின் கற்பனை அழகுகளையும், உணர்ச்சி வெளிப்பாடுகளையும் கொண்டுவர முடியும் என்று உணர்த்தப்பட்ட பிறகு முதலில் தோன்றியது நாவல்தான்" என்று கூறுகிறார். இலக்கியத் துறையில்

தற்காலம் நாவலின் காலம் (The Age The Novel) என்றே வருணிக்கப்படும் அளவிற்கு, தமிழிலே மட்டுமல்லாமல், இன்று உலக மொழிகளின் இலக்கியத் துறைகளில் எல்லாம் நாவல் ஒரு தனிச் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கிறது.

## தற்காலத்தில் புதினங்களின் நிலை

1876-ஆம் ஆண்டில் நீதிபதி மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களின் பிரதாப முதலியார் சரித்திரம் என்ற நூலின் மூலம் தோன்றிய தமிழ் நாவல் இலக்கியம் 144 ஆண்டுகளைக் கடந்து வளர்ந்து வந்துள்ளது. நுவல்பொருளின் அடிப்படையில் சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள், துப்பறியும் நாவல்கள், உளவியல் நாவல்கள் என்று பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். காலத்திற்கேற்ப நாவல்களை புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கியிருப்பது நாவலின் வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

"நாவலாசிரியர்கள் 'கூடிய வரையில், தமக்கு நன்கு தெரிந்த வாழ்க்கைப் பகுதிகளையும், இடங்களையும் அமைத்தே நாவல் எழுதுதல் நல்லது' - என்பார் 'டாக்டர் மு.வ'. அவர்கள். மு.வரதராசனார் அவர்களின் கருத்துப்படியே, பல நாவல்கள் தோன்றி உள்ளன." (Backiamary. 2008). தற்காலத்தில் புதினங்களைப் படைத்த ஆசிரியர்கள் யதார்த்தங்களை உள்வாங்கிக் கொண்டு புதினங்களை படைக்கலானார்கள். காலம் காலமாக வரிசை வரிசையாய் கதை சொல்லும் பாணியே மிஞ்சி இருந்த நிலை மாறி, உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அக மனவுணர்வில் நிகழ்வுகளைக் கூறிச் செல்லும் போக்குத் தற்காலப் புதினங்களில் காணப்பட்டது.

## கண்மணி குணசேகரன்

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், மணக்கொல்லை என்ற கிராமத்தில் அய்யாதுரை - சின்னப்பிள்ளை ஆகியோருக்கு மகனாக 1971 - ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் நாள் பிறந்தார். ஐ.டி.ஐ வரை படித்த இவர் விருத்தாசலம் அரசு போக்குவரத்துத்துறை ஊழியராகப் பணிபுரிந்து வருகிறார். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த இவருக்கு, காசிமணி என்ற மனைவியும், 'தமிழ்மதி, அறிவுமதி, இளமதி' என்ற மூன்று மகன்களும் உள்ளனர். இவரின் முன்னோடி பேராசிரியர் த.பழமலய் அவர்கள் ஆவார். கண்மணி குணசேகரனின் படைப்புகள் அட்டவணை 1-இல் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.** கண்மணி குணசேகரனின் படைப்புகள்

| | |
|---|---|
| **கவிதைகள்** | தலைமுறைக் கோபம் (1994),<br>காட்டின் பாடல் (2001),<br>காலடியில் குவியும் நிழல்வேளை (2007),<br>சிற்றகலில் தொற்றிய தீத்துளி (2016). |
| **சிறுகதைகள்** | உயிர்த்தண்ணீர் (1997),<br>ஆதண்டார் கோயில் குதிரை (2000),<br>வெள்ளெருக்கு (2004),<br>பூரணி பொற்கலை (2012). |
| **அகராதி** | நடுநாட்டுச் சொல்லகராதி. (2007-2017). |
| **புதினப் படைப்புகள்** | அஞ்சலை (1999),<br>கோரை (2003),<br>நெடுஞ்சாலை (2009),<br>வந்தாரங்குடி (2014). |

## கண்மணி குணசேகரன் பெற்ற விருதுகள்

2007-ஆம் ஆண்டு நாஞ்சில் நாடன் கையில் 'கோரை' புதினத்திற்காக 'சுந்தர ராமசாமி விருதும்', 2007-ஆம் ஆண்டு 'நடுநாட்டுச் சொல்லகராதிக்கு' கலைஞர் மு.கருணாநிதி முன்னிலையில் 'பரிதி இளம்வழுதி' அவர்களின் கையில் தமிழ் வளர்ச்சித்துறை விருதும் பெற்றார். 2013-ஆம் ஆண்டு 'அஞ்சலை' புதினத்திற்காக 'கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் புனைவு விருதும்' பெற்றார்.

## சடங்கு

நா.கதிரைவேற் பிள்ளை அவர்கள் தமிழ்மொழி அகராதி என்னும் நூலில் 'சடங்கு' என்னும் சொல்லின் பொருளாக "கிரியை, செய்முறை" என்று வரைந்துள்ளார். மணிமேகலைப் பிரசுர ஆசிரியர்க்குழு உருவாக்கிய மணிமேகலை தமிழ் - தமிழ் ஆங்கில அகராதி என்னும் நூலில் 'சடங்கு' என்பதற்கு "A Religious ceremony.". என்ற பொருளில் சடங்கிற்கு விளக்கம் அளித்துள்ளனர். முல்லை தமிழ் இலக்கிய அகராதியில் "சடங்கம்" என்ற பொருளில் வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார் கூறியுள்ளார். அகராதிகளின் பொருளை நோக்குங்கால் காலம் காலமாக நம் முன்னோர்கள் கடைப்பிடித்த ஒரு விழாவாகவும், கிரியையாகவும் 'சடங்கு' இருப்பதை உணர முடிகிறது (Kathirver Pillai, 2016).

"சடங்கென்பது நிர்ணயிக்கப்பட்ட விரிவான நடத்தைகளின் வடிவமாகும். இது தனிமனிதனின் சுயமான ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிச் சிறப்புக் கூறாகவோ அமையும். பண்பாட்டின் ஏனைய அம்சங்கள் இன்றிச் சடங்குகளிலேயே வெவ்வேறு நாகரிகங்களின் நம்பிக்கைகளும் இலட்சியங்களும் மிகத் தெளிவாக வெளிப்படுகின்றன என்று ரூத் பெனிடிக்ட் (Ruth Benedict)" அவர்களின் விளக்கத்தை எடுத்துக்காட்டியுள்ளார் (Sakthivel, 1990). "பழக்க வழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறிவியல் கருவி, ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும்போது அவை சடங்குகளாக மாறுகின்றன." (Sakthivel, 1990).

சடங்கு என்ற சொல்லிற்கு வழக்கமான, சமய வழிபாட்டு முறை என்று பொருள். சடங்குகளைச் செய்வோனுக்கு அவனது நோக்கம் நிறைவேறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கச் சரியான வழியில் அவனது சிந்தனையைச் செலுத்துவதே சடங்கின் உண்மையான நோக்கமாகும். "சடங்குகளின் தோற்றத்திற்குப் பல காரணங்கள் உண்டு எனப் பொருள் கூறுகின்றது." (The New American Encyclopeadia. Pa. No. 1170).

"முன்னரே வகுக்கப்பட்டுள்ள முறைப்படிச் செய்யப்படும் சமயத் தொடர்பான செயலே சடங்கு." என்ற பொருளை திட்பப் பொதுக்கலைக்களஞ்சியமும், பிரித்தானிய கலைக்களஞ்சிமும் பொருள் கூறுகின்றது. (The Concise Universal Encyclopadia Pa. No 1156). (The Encyclopaedia. Vol.XXIII. Pa.No. 370).

"பழக்க வழக்கங்களை மேலோட்டமாகப் பார்த்தால் பொருளற்றவைப் போல் தோன்றினாலும் அவற்றின் உள்ளீடாகப் போதுமான காரணங்கள் இருக்கின்றன." (The New dlctionary of Thoughts. Pa.No. 113) என்று சி. பிராண்டே பொருள் அளித்துள்ளார்.

"வழக்கம் என்பது சமுதாயத்தில் கட்டுக்கோப்பிற்கும், வாழ்க்கையில் மனநிறைவைப் பெறவும் மக்கள் கடைப்பிடித்தொழுகும் ஒழுக்கத்தால் அமைவது. பன்னெடுங்காலமாக பழக்கத்தில் இருந்து வரும் சிறந்த நெறியே வழக்கம் எனப்படுவதாகும்." என்று பொருள் வரைந்துள்ளார் (Thirunavukarasu, 1962). ஆகவே மக்கள் காலம் காலமாக கடைப்பிடித்துவந்த வழக்கமே சடங்காக மாறியுள்ளது என்பது அறிய முடிகிறது.

தமிழில் முழுவதும் கிடைக்கும் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். வாழ்வியலுக்கான கொள்கைகளை வகுத்தருளிய தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் என்ற அதிகாரத்தில் அச்ச உணர்வு தோன்றுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்

பிணங்கல் சாலா அச்சம் நான்கே."

பண்டைய மக்களின் வாழ்வில் தொல்காப்பியர் கூறிய இந்நால்வர்மேல் தோன்றிய பயமே அச்ச உணர்வை ஏற்படுத்தியது. அதற்காக சில கிரியைகளை செய்தும், தெய்வத்தின் மேல் நம்பிக்கை வைத்தும் வழிபடலாயினர். இதுவே காலப்போக்கில் சடங்காக மாறியது.

"தெய்வங்களுக்குப் பலி முதலியன நேர்ந்து பிரீதி செய்தால் அவை துன்புறுத்தா என்று கருதினார்கள். அதனாலேயே இவை நாளடைவில் சமூகத்தினரின் பழக்க வழக்கமாகவும், ஆசாரமாகவும், சடங்குகளாகவும் பரிணமித்து விட்டன." (Vaiyapuri Pillai. 1958).

## இசைக்கருவிகள்

திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளில் இசைக்கருவிகளை ஒலிக்கச் செய்வார்கள். "முரசு இயம்பின முருகு அதிர்ந்தன." "முரசு, முருடு, யாழ், குழல், தண்ணுமை, பணிலம், முழவு" போன்ற மங்கல இசைக்கருவிகள் ஆண்டுப் பயன்படுத்தப்பட்டன.

"கோயில் மோளத்துக்காரங்க வந்துட்டாங்க. கனகராசு உள்ளே வந்து ஒரு பாயை விரித்துத் திண்ணையில் போட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் ஒலிப்பெருக்கியில் நாதஸ்வரமும் தவிலும் வேப்பங்குறிச்சியில் அதம் பரப்பிக் கொண்டிருந்தன." (Kanmani Gunasekaran, 2013).

## பூப்பெய்தல் சடங்கு

மக்கள் தமிழினம் என்ற பிரிவில் அடங்கினாலும், தத்தம் பகுதியில் பேசும் பேச்சு வழக்கிற்கேற்ப பருவச் சடங்குகளின் பேச்சு வழக்கானது மாறுபடுகிறது. பூப்பெய்தல், பருவமடைதல், வயதிற்கு வந்த பெண், சமைந்த பெண், சடங்குக்கு வந்த பெண் என பலவாறாக மாறுபடுகிறது. ஒரு பெண் முதல் முதலாக பூப்பெய்தும்போது, தாய்மை எய்துவதற்குரியப் பக்குவத்தினை உடம்பின் வாயிலாக பெற்றுவிடுகிறாள்.

"முலைமுகம் செய்தன் முள்ளெயி றிலங்கி;

தலைமுடி சான்ற் தண்தழை யுடையை

அலமரல் ஆயமொ டியாங்கணும் படாஅல்

மூப்புடை முதுபதி தாக்கணங் குடைய

காப்பும் பூண்டிசின் கடையும் போகலை

பேதை அல்லை - மேதையங் குறுமகள்!

பெதும்பைப் பருவத் தொதுங்கினை." ஒரு வீட்டில் இருக்கும் பெண் பருவமடைந்தாலே, அக்குடும்பத்திற்கும், உறவினர்களுக்கும் மகிழ்ச்சியளிக்கும் விதமாக இந்நிகழ்வு அமைந்துவிடுகிறது. பெண் பருவமடைந்தாலே மூன்று மாதங்கள் தீட்டு என்று குடும்ப உறுப்பினர் முதற்கொண்டு பங்காளிகள் வரை இறைப்பக்திக்கு செல்வதில்லை. சொந்தங்கள் ஒன்றுசேரும் விதமாக இச்சடங்கு முதன்மை வகிக்கிறது (Subramanian, 2011).

"கலம்தொடா மகளிரின், இகந்து நின்றவ்வே." அவளுக்கென்று தனியறை ஒதுக்கப்படும். அவள் எதையும் தொடக்கூடாது, அவள் தொட்டப் பொருட்கள் தூய்மையற்ற பொருட்கள் என்பதும், அதனால் அம்மகளிர் கலம்தொடா மகளிர் என புறநானூறில், நொச்சித்திணையில் பொன்முடியார் என்னும் புலவர் உரைக்கிறார். சங்க காலத்திலிருந்தே பூப்பெய்தல் சடங்கு நிகழ்ந்துள்ளதை புறநானூறு வாயிலாக அறிய முடிகிறது (Subramanian, 2011).

## வந்தாரங்குடி புதினத்தில் மலரின் பூப்பெய்தல் சடங்கு

நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு, மக்கள் தங்களுடைய வீடு, நிலங்களை எல்லாம் கொடுத்துவிட்ட பிறகு, நிறுவனம் அளித்த மாற்றுக்குடியிருப்பில் வந்தாரங்குடியாய் சென்றனர். அம்மக்களின் வாழ்வியலை மையப்படுத்தி, கண்மணி குணசேகரன் அவர்கள் எழுதிய புதினம் 'வந்தாரங்குடி' என்னும் புதினம் ஆகும். மக்கள் வசதியாக வாழ்ந்தாலும், வசதியின்மையால் வாழ்ந்தாலும், அந்தந்தக் காலக்கட்டங்களில் இயற்கையாக வரும் அனைத்து சடங்குகளையும் கடைப்பிடித்தால்தான் பண்பாடு மிளிரும். வசதியாக இருப்பவரின் வீட்டில் அனைத்து பொருட்களையும் கொண்டு, அனைத்து சொந்தங்களையும் அழைத்து விமரிசையாகக் கொண்டாடுவான். வசதி குறைந்த வீட்டில் தன்னால் முடிந்த அளவிற்கு முன்னோர்கள் கடைப்பிடித்த பண்பாட்டை காக்க முயல்வர். ஆனால் பெண் பிள்ளைகளுக்கு பருவமெய்தல் என்பது இயற்கையாக நிகழும் நிகழ்வு. உற்றார் உறவினருக்குத் திருமண வாழ்க்கைக்கு அடிகோலும் முதல் நிலையே பூப்பெய்தல் சடங்காகும். இதன் வாயிலாக திருமண வயது அடைந்தவுடன் பெண் கேட்டும் நிகழ்வை மற்றவருக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதே பூப்பெய்தல் நிலையின் முக்கிய அங்கமாகும்.

"எம்பளாய்சு வூட்டு காரியம் என்பதால் நல்ல கூட்டம். ராசோக்கியம், ஊரிலிருந்து தெருவு சனங்களை வண்டிக்கட்டிக் கொண்டு அழைத்து வந்திருக்கிறார். பட்டுப்புடவை சரசரக்க மலர், நாற்காலியில் வந்து குந்தினாள். தாய்மாமன் வரிசை சதாசிவம்தான் செய்ய வேண்டும். மாலையை எடுத்து கிழக்கு பார்த்து கும்பிட்டு போட்டுவிட்டு, ஊர் மெப்புக்கு கழற்றிக் கொடுத்திருந்த கனத்த சங்கிலியை மலர் கழுத்தில் போட்டான். பிறகு தன் சம்பாத்தியத்தில் ஆசையாய் வாங்கிய நெளிமோதிரத்தை வரிசைத்தட்டின் மீதிருந்த சந்தன நிறப் பேழையிலிருந்து எடுத்தான்." (Kanmani Gunasekaran 2013).

## பெரியபுராணம் காட்டும் திருவிளக்கின் மகிமை

"சோதி விளக்கொன்று ஏற்றுதலும் சுடர்விட்டு எழுந்ததுஅது நோக்கி". திருவாரூர் அறநெறிக் கோயிலில் திருவிளக்கேற்றும் தொண்டு செய்தவர் நமிநந்தி அடிகள். ஒருநாள் இறைவனுக்கு திருவிளக்கேற்ற எண்ணெய் கேட்டபோது தண்ணீரில் விளக்கேற்று என்று சமணர் கூறிவிட்டனர். மனம் வருந்திய நமிநந்தி அடிகள் அருகிலிருந்த குளத்துத் தண்ணீரின் மூலமாக விளக்கேற்றினார். இருளை போக்கி ஒளியைத் தரும் விளக்கு அனைத்து மங்கல நிகழ்விலும் இடம்பெறுகிறது. இதனை, கண்மணி குணசேகரன் அவர்களும் 'வந்தாரங்குடி' புதினத்தில் சடங்கின் மூலமாக விளக்கேற்றும் விதத்தைக் காண்பிக்கிறார்.

"ரங்கநாது தாம்பால தட்டுக்களின் முன்னால் குந்தியிருந்தார். ஒரு தாய் விளக்கும், இரண்டு குத்துவிளக்குகளுமாகக் கொண்டு வந்துவைத்து எண்ணெய் ஊற்றித் திரி பிழிந்து ஏற்றினாள் மலர். நெய்வேலியில் வேலை செய்கிற இடத்திலிருந்து தள்ளிக் கொண்டு வந்திருந்த குச்சி பல்புகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தன. ஏகாலி அரசாயி நெல் கொண்டுவரச் சொல்லி நிரவி மேலே மாத்துத் துணியை விரித்துக் கொண்டிருந்தாள். மின்னலுக்கு ஆடை ஆபரணங்கள் பூட்டி, வாசலுக்கு அழைத்து வந்த மாதிரி பூமா. சந்தனம் தடவி, குங்குமம் வைத்து, அம்மிக் குழவியை ஒப்புக்கு முனைகளைத் தொடைமீது தொட்டு எடுத்து, வாய்க்கு வாழைப்பழம் கிள்ளிக் கொடுத்து ஒருமுறை ஏமாற்றி மறுமுறை கொடுத்து, அரிசியை அள்ளி வாழ்த்திப் போட்டு மாலையைக் கழற்றி, கிழக்கு பார்த்து செம்பைய்யனாரை வேண்டி கும்பிட்டு கழுத்தில் போட்டாள்." இவ்வரிகளின் வாயிலாக பூப்புனித சடங்கின் நிலையையும், நம் பண்பாட்டையும் அறியலாம் (Kanmani Gunasekaranin, 2013).

## திருமண சடங்கு

"திருமணம் இரண்டு தனிப் பட்டவர்க்கிடையே நடைபெறும் உடன்படிக்கையன்று, இரண்டு குழுக்களிடையே இணைப்பை, நெருக்கத்தை, ஏற்படுத்தும் உறவுத்தளை என்பது நியதி." என்ற கருத்தை இந்திய பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற கருத்தரங்கத்தில் கூறியுள்ளனர்.

"திருமணம் என்பது ஓர் ஆடவலும், பெண்ணும் இணைந்து வாழ்வதற்காகச் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்ட வினைமுறையாகும்."

## திருமணத்திற்குரிய வேறு பெயர்கள்

"நாடறி நன்மணம் அயர்கம் சில்நாள்" (குறிஞ்சிப்பாட்டு - வரிகள் 232. பக். 340)

இதில் 'மணம்' என்ற சொல் திருமணத்தைக் குறிக்கிறது. "நல்லோர் நல்லோர் நாடி, வதுவை அயர விரும்புதி நீயே." மருதத்திணையில் தலைவி கூற்றாக அமைந்த ஓரம்போகியார் பாடலில் 'வதுவை' என்ற சொல் திருமணத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

"மன்றல் கலந்த மணிமுரசின் ஆர்ப்புஎழ,". நல்லந்துவனார் செவ்வேள் கடவுளை பாடிய பாடலில் 'மன்றல்' என்ற சொல் திருமணத்தைக் குறிக்கும் சொல்லாகும். "வரைதல் வேண்டி தோழி செப்பிய" என்ற வரிகளில் 'வரைவு' என்ற சொல் திருமணத்தைக் குறிக்கிறது.

"கல்யாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியற்." (நாலடியார் - 86. வரி. 2. பக். 50). கலியாணம் என்ற சொல்லைதான் இன்றைய கால மக்கள் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். "அறத்தொடு கல்யாண மாள்வினை கூரை." சங்க இலக்கிய நூல்களையும், அற இலக்கிய நூல்களையும் நோக்கும்பொழுது, 'மணம், வதுவை, மன்றல், வரைவு, கல்யாணம், கலியாணம்' போன்ற சொற்கள் திருமணத்தைக் குறிக்கும் சொற்கள் என்பதை அறிய முடிகிறது.

## தொல்காப்பியரின் திருமண வரையறை

தமிழில் முழுவதும் கிடைக்கும் முதுல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். 'எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம்' என்னும் மூன்று அதிகாரத்தினுள் ஐந்திலக்கணங்களும் அடங்கியுள்ளது. வாழ்வியலுக்கான இலக்கணங்களை வகுத்த தொல்காப்பியர் பொருளதிகாரத்தில், கற்பியல் என்னும் இயலில்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

கொளற்குறி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினனோர் கொடுப்பக் கொள்வதுவே." தலைவனும் தலைவியும் இணைந்து காதல் கொள்கின்றனர். இவர்களின் காதல் வாழ்க்கை கற்போடு இருக்க வேண்டும் என்பதற்காக திருமணம் என்னும் சடங்கை நிகழ்த்த முற்படுகின்றனர் என்ற திருமண வரையறையைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். தலைவனும் தலைவியின் காதல் வயப்பட்டு பெற்றோரின் இசைவுடன் நடைபெறும் திருமண முறையும், பெற்றோர்களே தாமாக முன்வந்து தன் பிள்ளைகளுக்கு நடத்தும் திருமண முறையும் என இரண்டு திருமண முறைகள் நம் சமுதாயத்தில் நிகழ்கின்றன.

## அறிவழகன் வெற்றிச் செல்வியின் திருமணம்

தமிழர் பண்பாடுகளில் திருமணம் என்னும் சடங்கு முக்கியப் பங்காக அமைந்துள்ளது. துறவிகள் சிலர் திருமணமாகாமல் அறத்தைக் கடைப்பிடிப்பினும், திருமணத்தின் மூலமாகதான் அடுத்த சந்ததியை உருவாக்க முடியும் என்ற உயரியப் பண்பை வைத்தே, மங்கல சடங்குகளில் திருமண சடங்கே உன்னதமான சடங்காகப் போற்றப்படுகிறது. வேப்பங்குறிச்சி மக்களுக்காக நித்தமும் உழைத்தவர்கள் அறிவழகனும், சிகாமணியும் ஆவர். தான் பெற்ற பிள்ளைகளுக்கு திருமணம் செய்விப்பதில் பெற்றோர்க்கு அளவுக்கடந்த மகிழ்ச்சியாக அமையும். அறிவழகனின் பெற்றோரான ரங்கநாதுவும் காயாம்பூவும் வெற்றிச்செல்விக்கும் அறிவழகனுக்கும் மணம் முடித்து வைத்தனர்.

"புத்தம் புது நேசம் மார்பில் உரச வெற்றிச்செல்வியின் கழுத்தில் அறிவழகன் தாலியைக் கட்டினான். ஒலிவாங்கியில் சங்கத்துக்காரர்கள் மணமக்கள் வாழ்க...மணமக்கள் வாழ்க

வாழ்த்தொலித்தனர்." "மணமக்கள் எழுந்து நிற்க அய்யா தொகையினைக் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக்கொண்ட மக்கள், அய்யாவின் கால்களில் விழுந்து ஆசி பெற்றனர். ஒலிபெருக்கி இனிய பெண் குரலில் மெலிதாகப் பாடிக்கொண்டிருந்தது. தமிழுக்கு அமுதென்று பேர். அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்." (Kanmani Gunasekaranin 2013).

## தெய்வம் வந்து ஆடுபவரை மலையேற்றுதல்

தொல்காப்பியர் கருப்பொருள்களை உரைக்கும்போது தெய்வத்தை முதலில் குறிப்பிட்டு தெய்வத்தின் நிலையை உயர்த்தியுள்ளார்.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருவென மொழிப."

முப்பொருள்களில் மக்களின் வாழ்வியல் அடங்கிவிடுவதைத் தொல்காப்பியனார் உரைக்கிறார். கருப்பொருள் பதினான்கனுள் தெய்வத்தையே முதலில் வைத்து தமிழரின் பண்பாட்டிற்கு வழு சேர்த்திருக்கிறார். மக்கள் தங்கள் இன்பத் துன்பங்களை எல்லாம் தெய்வத்திடம் பகிர்ந்துக் கொள்கின்றனர். விரதம் இருந்து, தெய்வத்தை முறையாக வழிபடும் போது, இசைக்கருவிகளின் ஓசையால் அருள்ஃமருள் வந்து ஆடுவார்கள். அவர்களை ஒருநிலைப்படுத்தி மனிதத்தன்மைக்கு மாற்றும் நிகழ்வே, தெய்வத்தை மலையேற்றும் சடங்காகக் கடைப்பிடித்திருக்கின்றனர்.

"தீப ஆராதனை காட்டிவிட்டு தட்டை எடுத்துப்போன கரியர், கீழே வைக்காமல் வெகு நேரமாய் அய்யனாரையே பார்த்துக் கொண்டு நின்றார். வீரசிங்கன் குப்பத்து வேலாயுதத்தின் பம்பை கணதாண்டி விண் விண் என்று அடி தெறித்துக் கொண்டிருந்தது. திடுமென கரியருக்குள் ஒரு மின்னல் பாய்ச்சல். நா அய்னாரு வந்துருக்கன்டா. அய்னார எப்பா எப்பியும் மாதிரி எங்களுக்கு ஒரு தொனையா இருடா சாமீ கரியரின் ஆட்டவோட்டம் நின்று மௌனமாகவும், ரங்கநாது விபூதியைப் போட்டார்." (Kanmani Gunasekaranin 2013).

"சாமியாடுதல் என்பது இன்றியமையாத நிகழ்வாகும். பூசாரியோ அல்லது வேறு தனிநபர் ஒருவரோ பலரோ, சடங்கியல் வேளையில் தன்னிலை பிறழ்ந்து ஏதோ ஒன்று தம் மீது வரப்பெற்றவராக சில இயல்புகடந்த செயல்களைச் செய்வர். இந்தத் தன்னிலைப் பிறழ்ந்த நிலையே தெய்வமுறுதல் அருள்ஃமருள் நிலை என்று குறிப்பர். இவ்வாறு ஒருவரைப் பிடித்திருந்த அல்லது ஆட்கொண்டிருந்த தெய்வம் அல்லது ஆவி ஆற்றலானது விரட்டப்பட்டு வெளியேற்றுதலே மலையேறுதல் நிகழ்வாகும்".

## ஈமச்சடங்கு

எவ்வுயிருக்கும் பிறப்புண்டேல் இறப்பும் நிச்சயமாக உண்டு. இதை யாராலும் மாற்றவும் முடியாது. மறுக்கவும் முடியாது. ஒருவரின் இறப்பின் காலத்தை மட்டும் கொஞ்ச நாள் தள்ளி வைக்கலாமே தவிர, இறப்பையே தள்ளி வைக்க முடியாது. இறந்தவரின் உடலும், உள்ளமும் நல்நிலையில் சாந்தியடைய சில சடங்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

"இடுதிரை மணலினும் பலரே, சுடுபிணக்

காடுபதி ஆகப் போகி, தம்தம்,

நாடு பிறர் கொளச் சென்று மாய்ந்தனரே."

என்ற புறநானூறு வரிகளும், புலையன் உப்பின்று வேகவைத்த சோற்றைப் படைக்கும் இறுதிநாள் வரும் முன்பே இந்நில உலக வாழ்க்கையைப் பற்றறத் துறக்க வேண்டும் என்று ஐயாதிச் சிறுவெண்தேரையாரின் பொதுவியல் திணையில் வரும் பொருளும் இறப்பின் உண்மையைக் கூறிகின்றன (Subramanian, 2011).

## பாஞ்சாலையின் இறுதிச் சடங்கு

நெய்வேலிக்கு அருகில் உள்ள வேப்பங்குறிச்சி ஊர் மக்கள் அனைவரும் தங்கள் நிலங்களை எல்லாம் நிறுவனத்திற்கு கொடுத்துவிட்டு, மாற்றுக்குடியிருப்பான புதுவேப்பங்குறிச்சிக்கும், உற்றார் உறவினரின் ஊர்களுக்கும் சென்று குடியேறினர். இதில் ராசோக்கியம் பாஞ்சாலை தம்பதியினர் தன் மகள் பூமாவை அழைத்துக்கொண்டு, முதனை என்ற கிராமத்தில் வந்தாரங்குடியாய் சென்றனர். அங்கு பல இடையூருக்குப் பிறகு மணக்கொல்லை என்ற கிராமத்தில் சொந்தமாக நிலம் வாங்கி, முறையானப் பத்திரப்பதிவு செய்து குடியேறினர்.

மணக்கொல்லையில் உள்ள கோபால் மகனின் அரக்க குணத்தால், திருமணமாகாத பூமாவிற்கு இன்னல் ஏற்பட்டது. ஊர்ப்பொதுமக்களும் இராசோக்கியமும் அதை தட்டிக்கேட்டபோது பூமாவின் மீது அவதூறாகப் பழிச்சொல் கூறிவிட்டனர். அப்பழிச் சொல்லைக் கேள்வியுற்ற பூமாவின் தாயான பாஞ்சாலையின் மனம் கொதித்தது. எழுந்து நடக்கும்போது புடவை காலில் மாட்டிக்கொண்டதால் நிலை தடுமாறி கீழே விழுந்து பின்மண்டையில் அடிப்பட்டு இறந்தாள்.

"மேளத்த இட்டுக்கிட்டு வாய்க்கரிசிக்கூடை தூக்குறமாதிரி ஆளுவுளோட வாங்க. எலேய் யாராச்சும் வுடத்தெரிஞ்சவனுவோ அந்த வாணத்த எடுத்து வுடுங்களன்டா. சற்றே அமர்ந்திருந்த அழுகை குபீரென்று தீயைப்போல் சூழ்ந்துக் கொள்ளவும் தங்கப்பழமும் கீச்சுக்குரலில் கத்துகிறாள். கும்பலிலிருந்து தனித்து சுவரில் சாய்ந்து குந்தியிருந்த இன்பவள்ளி சன்னமாய் அழுது புலம்பிக் கொண்டிகொண்டிருந்தாள்." (Kanmani Gunasekaran, 2013). ஔவையாரின் நல்வழியும்,

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்

மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா."

என்ற ஔவையாரின் வாக்கிற்கேற்ப அழுது புரளும் பூமாவை அருகில் இருந்த காசாம்பு தேற்றினாள். பந்த பாசத்தில் சிக்குண்டு கிடக்கும் ஆன்மாவால் அவ்வளவு எளிதாக பிரிவை தாங்கிக் கொள்ள முடிவதில்லை. பெற்றத்தாய் இறந்துவிட்டால் யாரால்தான் மனதை ஒருநிலைப்படுத்தி தைரியமாக இருக்க முடியும். தாய் என்பவள் இறைவனுக்கும் மேலானவள்.

"காசாம்பு - வுடு புள்ள அதான் நம்பள எல்லாத்தையும் வுட்டுட்டுப் பூட்டாள. நீ வேற ராத்திரியிலிருந்து பச்சத்தண்ணி கூட பல்லுல படாம அழுது அழுது பூமாவை சத்தம் போட்டாள்." (Kanmani Gunasekaran 2013). இறந்தவர்களை எரிக்கும் வழக்கத்தை புறநானூறும்,

"களரி மருங்கின் கால்பெயர்த்து ஆடி,

ஈம விளக்கின் வெருவரப் பேரும்." (புறநானூறு - 359. வரிகள். 6 - 7. பக். 496).

காஞ்சித் திணையில் அந்துவன் கீரனைக் காவாட்டனார் என்னும் புலவர் பாடிய பாடலில் இறப்பின் நிகழ்வை எடுத்துரைக்கிறார்.

"இறந்தவரைத் தீயிலிட்டு எரிக்கும் முன்பு புலையன் உண்ணுமாறு தருப்பைப் புல்லின் மேல் கள்ளுடன் சோறாகிய உணவைப் படைக்கும் வழக்கம் உண்டு." (புறம் - 360. பக். 496) என்று காஞ்சித்திணையில் சங்க வருணர் என்னும் நாகையாரும் புறநானூறில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த மண்ணு தரமேல

இந்த பூண்டு பொடுசுல்லாம்

இங்க பூத்து நிக்கையில

நீங்க பூத்து நிக்கிறது.

இந்த மண்ணுதான் புடிக்காம

நீங்க மாண்டுதான் போனிங்களா."

"பண்ருட்டி பாடையை ரொம்புவும் ஆடம்பரமாய்க் கட்டிக் கொண்டிருந்தார்கள். நெருப்பில் காய்ச்சிய முறுக்கில், நொறுக்கிக் கொண்டிருந்தன டப்பட்ட மேளங்கள்." "கனகராசு கொழுந்தன் கோடி போடவும், பாடையில் தூக்கி வைத்துக் கட்டினார்கள். வாழ்ந்த எடத்த வுட்டுட்டு வந்தாரங்குடியா போன மாதிரி, இன்னக்கி எரவ சுடுகாடுன்னும் ஒந் தலையில் எழுதியிருந்து போச்சே - பாஞ்சால."

"அழல் வாய்ப் புக்க பின்னும்."

இடுகாட்டில் பாடையை இறக்கிப் பிணத்திற்குக் கள்ளும், தருப்பைப் புல்லின்மேல் சோற்றையும் வைத்துக் கடன் கழிக்கும் வழக்கினை புறநானூறு எடுத்துரைக்கிறது.

## முடிவுரை

சடங்குகள் வேறு சில செயல்களுக்காவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, புனிதத் தன்மையைப் பாதுகாக்கவும், அதற்குக் களங்கம் ஏற்படாமலிருக்கவும், தீயவற்றிலிருந்து தனிமைப்படுத்தி வைக்கவும் மேற்கொள்ளப்படுகின்றன. சமுதாய வாழ்வில் சடங்குகள் பெரும் பங்காற்றுகின்றன. சடங்கு நிகழ்ச்சிகளின்போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கும் அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்றுபட வைக்கிறது.

இல்லங்களிலும், கோயில்களிலும் திருவிளக்கேற்றும் முறையைக் கடைப்பிடித்து இருளைப் போக்கினர். இந்நிகழ்வு அனைத்து மங்கலம் மற்றும் அமங்கல நிகழ்விலும் கடைப்பிடிக்கிறது. அனைத்து நிகழ்வுகளுக்கும் விளக்கொளி இன்றியமையாத ஒன்றாக இருப்பதை மலரின் சடங்கிலும், பூமாவின் சடங்கிலும் அறிய முடிகிறது.

மணமென்னுஞ் சொல் நறுநாற்றத்தைக் குறிக்கும். மலரில் மணம் வெளிப்படுவதுபோல மணமக்களின் மனத்தின்கண் அன்பு வெளிப்படுத்தும் நிலையே திருமணம் ஆகும். "பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டோடு" என வரும் நூற்பாவில் திருமணத்திற்கு பொருந்தக்கூடிய பண்புகளை விளக்கியுள்ளார். பொருத்தம் பார்த்ததும் நன்றாக பொருந்தியிருந்தால் திருமணம் முடிக்கும் நிகழ்வு நம் பண்பாட்டில் இருப்பதை இதன் மூலம் காணமுடிகிறது. உயர்நிலை எய்தி உயர்வு பெறுவதே குடும்ப வாழ்க்கையின் நோக்கமாகும். இல்வாழ்க்கையானது 'அறம், பொருள், இன்பம்' என்ற முப்பாலையும் உளள்டக்கி, சிறப்புற வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதை அறியலாம். அவ்வகையில், அறிவழகன் - முத்துச்செல்வியின் திருமணம், நம் பண்பாட்டைக் கொண்டு கடைப்பிடித்திருக்கும் நிலையை வந்தாரங்குடி புதினத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இடுகாட்டில் பிணத்திற்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்த பின்னர், தோண்டப்பட்ட குழியில் அப்பிணம் புதைக்கப்படும் அல்லது எரிக்கப்படும். "கரிபுற விறகின் ஈம ஒள்அழல்." என்ற வரியின் வாயிலாக எரிக்கும் வழக்கத்தைக் கடைப்பிடித்துள்ளனர் என்பதை உணர்த்துகிறது வாழும்போதும் நிம்மதியாக இல்லாமல் ஊர் ஊராகச் சென்றதும், சென்ற இடத்திலாவது நிம்மதியாக உழைத்து வாழ விரும்பிய குடும்பத்தைப் பழிவாங்க நினைக்கும் கோபால் வீட்டாரின் தீய எண்ணத்தால் உடல் பிரியும் நிலையும் பாஞ்சாலையின் வாழ்க்கையில் மேன்மேலும் அவலத்தைக் காட்டுகின்றன. பாஞ்சாலையின் இறப்பின் வாயிலாக வழிவழியாக கடைப்பிடித்து வந்த இறப்பு சடங்குகளையும் அறிய முடிகிறது. பண்பாட்டின் வழி நின்ற நடுநாட்டுப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சடங்குகளை 'வந்தாரங்குடி' புதினத்தின் மூலமாக வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் பயனாகவும் முடிபாகவும் கொள்ள வேண்டும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## References

Backiamary, (2008) Vagaimai nokkil tamil ilakkiya varalaru, Chennai, India.

Kanmani Gunasekaran, (2013) Vandhaarankudi, Tamizhini Publications, Chennai, India.

Kathirver Pillai, Na., (2016) Tamil Mozhi Agarathi, Saradha Pathippagam, Chennai, India.

Sakthivel, Su., (1990) Nattupura iyal aaivu, Manivasagar Pathipagam, Chennai, India.

Subramanian, Sa. Ve., (2011) sanga ilakkiyam Moolam Muluvathum, Manivasagar Pathipagam, Chennai, India.

The Encyclopaedia Britannica, (1911) Vol. XXIII, New York, Eleventh Edition.

The New American Encyclopaedia, (1946) C., Ralph Taylor Books, New York.

Thirunavukarasu, Ka. Tha., (1962) Tamilar Naagariga Varalaru, 1st edition, tholkappiyar Noologam, Chennai, India.

Tholkappiyam Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India.

Vaiyapuri Pillai, S., (1958) Tamilar panpadu, tamil puthakalayam, Chennai, India.

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0) ext of this article is licensed under a Creative International License